கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 40/2017 இமஎண் 3/2022 எ.ம.சா.1 கிரீன்குமார்

2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24ம் தேதியில் வாதி தரப்பு சாட்சியாகிய எ.மா.சா.1 ஆன கிரீன்குமார் என்பவரின் வாக்குமூலம் (1969ஆண்டு 44வது விதியின்படி) திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்., கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு உறுதியளிக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | – | கிரீன்குமார் | தொழில் | – | கிராமநிர்வாக அலுவலர் |
| த/பெ க/பெ | – | முருகேசன் | ஜாதி | – | |
| கிராமம் | – | சோலபாளையம் | வயது | – | 31 |
| தாலூக்கா | – | பொள்ளாச்சி | தேதி | – | 24.02.2023 |

முதல் விசாரணை

நான் சோலபாளையம் கிராமநிர்வாக அலவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க பொள்ளாச்சி வட்டாட்சியருக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்திருந்தது. அவர் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க என்னை நியமித்து பிறப்பித்த உத்தரவு **நீ.மா.சா.ஆ.1** ஆகும்.

சோலபாளையம் கிராமம் க.ச.எண்.24/2A மற்றும் 25/1A தொடர்பான வருவாய் ஆவணங்களை சமர்ப்பிக்க கோரி வட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவின் பேரில் மேற்கண்ட இரண்டு க.ச.எண்களுக்கான 1422 முதல் 1431 வரையிலான பசலி ஆண்டுகளுக்கான அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகலை கொண்டு வந்துள்ளேன். அந்த அடங்கல் பதிவேட்டின் சான்றிட்ட நகல் **எமா.சா.ஆ.1** ஆகும். (10 எண்ணிக்கைகள்).

மேற்கண்ட காலை எண்களுக்கான கை சிட்டா சான்றிட்ட நகல் **எமா.சா.ஆ.2** ஆகும். மேற்கண்ட காலை எண்களுக்கான புலவரைபடங்கள் **எமா.சா.ஆ.3** ஆகும். (2 எண்ணிக்கைகள்) .

க.ச.எண் 24/2A மற்றும் க.ச.25/1A ஆகிய காலைகள் 1424ம் ஆண்டு பசலி படி 28.01.2015 அன்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட உட்பிரிவுகள் குவாலிட்டி ஸ்பின்னிங்மில் பிரைவேட் லிமிடெட் வகையறா பேர்களில் கூட்டுப்பட்டாவாக உள்ளது. மேற்படி காலைகளுக்கான கணிணி சிட்டா **எமா.சா.ஆ.4**

ஆகும். கணிணி சிட்டாவில் 29.01.2015 அன்று மேற்கண்ட உட்பிரிவுகள் செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது. கணிணி சிட்டாவில் உட்பிரிவு செய்யப்பட்ட தேதி தான் மாறியுள்ளது. Ref.No. கணிணி சிட்டாவிலும், 1424ம் ஆண்டு பசலி அடங்கல் பதிவேட்டிலும் ஒன்றாக உள்ளது.

1984 முதல் 1987 வரையிலான நிலஉடமை மேம்பாட்டு திட்ட பதிவேட்டின்படி மேற்கண்ட காலைகள் 24/2A மற்றும் 25/1A ல் கண்ட நிலங்கள் ரயத்து புஞ்சை நிலவகைப்பாடாக உள்ளது. நீ.மா.சா.ஆ.5 கணிணி சிட்டாவிலும் புஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1431 பசலி ஆண்டில் இருந்து மேற்கண்ட க.சஎண்கள் 24/2A மற்றும் 25/1A ல் கண்ட நிலங்கள் தரிசு என்று எழுதப்பட்டுள்ளது. நிலத்தீர்வை புஞ்சை நிலத்திற்கும் மற்ற நிலங்களுக்கும் மாறுபடுமா என்று எனக்கு தெரியாது.

நிலம் விவசாய பயன்பாட்டில் உள்ளதா இல்லையா என்று தான் என்னால் சொல்ல முடியும். வேறு நிலத்துடைய வகைப்பாட்டை பற்றி என்னால் சொல்ல இயலாது. மேற்கண்ட காலைகளை புலத்தணிக்கை செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் புலத்தணிக்கை செய்தபோது அங்கு கட்டிடம் இல்லை.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

சோலபாளையம் கிராம நிர்வாக அலுவலகராக எந்த தேதியில் இருந்து பணிபுரிகிறேன் என்றால் 28.02.2022 முதல் பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து இவ்வழக்கில் அழைப்பாணை வந்த பிறகு தான் க.சஎண்கள் 24/2A மற்றும் 25/1A ல் புலத்தணிக்கை செய்தேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு அந்த பூமியில் என்ன இருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

உட்பிரிவுக்கு முன்பு குவாலிட்டி ஸ்பின்னிங்மில் கட்டிடம் இருந்ததாக தான் அடங்கல் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உட்பிரிவு செய்யப்படுவதற்கு முன்பும், பின்பும் மேற்கண்ட காலைகளில் கண்ட நிலத்தில் விவசாயம் செய்ததற்கான எவ்வித குறிப்புகளும் அடங்கல் பதிவேட்டில் இல்லை என்றால் சரிதான்.

1422 முதல் 1428 பசலி ஆண்டு வரை மில் கட்டிடம் என்று தான் அடங்கல் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(ஒப்பம்)/– N.பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.